**3. அகலிகை கதை**

அகலிகை என்பவள் முற்கல முனிவருடைய மகள். ஈடில்லாத பேரழகு பொருந்தியவள். இவளைத் திருமணம் புரிதற்கு மக்களும் தேவர்களும் ஒருங்கே முயன்றனர்.



நீரில் நெடுங்காலம் மூழ்கித் தவம் செய்வோரே இவளை அடைவதற்குரியர் என்று முற்கல முனிவர் ஏற்பாடொன்றை வகுத்தார். பலரும் முயன்றனர். எவராலும் நீரில் மூழ்கி நெடுநாள் தவம் செய்ய இயலவில்லை. கௌதம முனிவர் என்பவரே இத்திருமணத் தேர்வில் வெற்றி பெற்றார். அகலிகையும் அவருக்கு மனைவியானாள்.

இந்திரன் அகலிகை மீது கடுங்காதல் கொண்டான். எவ்வாறேனும் அகலிகையை அணைந்து இன்புற வேண்டும் என்று மிக முயன்றான். சூழ்ச்சிகள் பல செய்தான். அகலிகை இவனுடைய சூழ்ச்சியில் சிக்கி ஒழுக்கம் கெட்டவள் ஆனால். கௌதமர் அகலிகையைக் கல்லாகும் படி சபித்தார். இந்திரனுக்கும் சாபம் கிடைத்தது.

ஒழுக்கமுடைமையே உயர்வினைத் தரும் என்பதும். அவ் வொழுக்கத்தில் தவறுதல் இழிந்த பிறப்பில் கொண்டு போய்ச் செலுத்திவிடும் என்பதும். அகலிகையால் நன்கு தெரியநின்றன.

[ஒழுக்கமுடைமை]